மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 20 வியாழக்கிழமை 16.08.2024 கதிர் 353







# ரணிலுக்கு ஆதரவான புதிய கூட்டணி உதயம்

➤ மொட்டு எம்.பி.க்கள் பலரும் இணைந்தனர்
➤ தலைவராக தினேஷ், செயலாளராக ரமேஷ்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் நோக்கில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணியொன்று உருவாக் கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வியாழக்கிழமை கொழும்பு பத்தரமுல்லை வோட்டர்ச் ஹேஜ் ஹொட்டலில் இடம்பெற்றது. ரணி லுக்கு ஆதரவான கட்சிகளின் தலைவர்கள், எம்.பி.க்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்தே இந்தக் கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

புதிய கூட்டணியின் தலைவராக பிரதமர் தினேஸ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளதுடன், பொதுச் செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரன நியமிக்கப்பட்டுள்ளார்.

7 ➤

## வவுனியாவில் அநுரகுமார



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசநாயக்கவின் பிரச்சாரக்கூட்டம் வவுனியா கலைமகள் சனசமூக நிலையமைதானத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அமைப் பாளர் உப்பாலி சமரசிங்க தலைமையில் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இதில் தேசிய மக்கள் சக்தியின் கட்சி முக்யஸ்தர்கள், ஆதரவாளர்கள், பல பகுதிகளில் இருந்தும் வந்த பெரும ளவான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## ரணில் ஆதரவு பிரசாரத்தில் ஆளுநர்கள்! கண்காணிப்பு குழுக்களிடம் முறைப்பாடு

ஆளுநர்கள் அரசியல் சார்பற்று இயங்க வேண்டுமென்ற சட்ட நிபந்தனைகள் அரசியலமைப்பில் உள்ள போதிலும் பெரும்பாலான ஆளுநர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு குழுக்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பல ஆளுநர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக அரசியல் பிரச்சாரங்களில் தீவிரமாகப் பங்கேற்பதை அவதானிக்க முடிவதாக தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் கூறுகின்றன.

குறிப்பாக வடமேல் ஆளுநர் நசீர் அஹமட், தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா, மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே, சப்ரகமுவ ஆளுநர் நவீன் திஸாநாயக்க, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் வடமத்திய ஆளுநர் மஹிபால ஹேரத் ஆகியோர் பகிரங்கமாக மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதிலும் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

## தேர்தல் சட்ட மீறல்களில் ஈடுபட்ட 22 பேர் கைது

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திற்கு இதுவரை 173 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 119 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 54 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள் ளன.

குறிப்பாக, நபர்களை தாக்கி காயப்படுத்துதல் மற்றும் சொத்துக்களை சேதப்படுத்துதல் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 04 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரணில் – தமிழரசு கட்சி இணைந்தே மாகாண தேர்தலுக்கு முட்டுக்கட்டை

### சஜித்தை ஆதரிப்பதால் தமிழரசில் பிளவு என்கிறார் நாமல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கூட்டிணைந்தே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டதாக குற்றம்சாட்டிய பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினால் அக்கட்சி பிளவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டத்தில் திருத்தச் சட்டமூலத்தை விவாதமின்றி நிறைவேற்றுவதற்கு பொன்னான வாய்ப்பு காணப்பட்டபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தங்களின் சொந்த அரசியல்

7 ➤

# ரணிலின் வெற்றியிலேயே இலங்கையின் எதிர்காலம்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன



"ஒரு வெற்றி நாட்டிற்கு தைரியத்தின் சேர்க்கை" என்ற தொனிப்பொருளில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற புதிய அரசியல் கூட்டணி இன்று பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்த கூட்டணி உடன்படிக்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மைக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் திஸ்ஸ யாப்பா ஜயவர்தன, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அமைச்சர் டிரான் அலஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய காங்கிரஸை பிரதிநிதித்துவப்ப டுத்தும் ஏ.எல்.எம். அதாவுல்லா, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அரவிந்த குமார், தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் அசாத் சாலி, தேசப்பற்றுள்ள மக்கள் சக்தி சார்பில் சுகத் ஹேவாவிதாரண ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவராக தெரிவுசெய் யப்பட்ட பிரதமர் தினேஷ் குணவர்தன,

"முற்போக்கு தேசிய இயக்கத்திற்கு இந்நாட்டு மக்கள் வழங்கிய இரும்பு நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில், நாம் அந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருந்த போது, நெருக்கடியான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் காரணமாக எமது ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினார்கள்.

கோவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, உலகப் பொருளாதாரம் சரிந்தது. இன்றும் அது மீளவில்லை.

இதில் எழுந்த பெரும் சவாலுக்கு தலைமை தாங்குவதற்காக 134 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தனர்.

சுதந்திர இலங்கையின் தந்தை யாகக் கருதப்படும் டி.எஸ்.சேனநாயக்கா தலைமையில் இருந்து இன்று வரை கூட்டு அரசாங்கங்கள் இருந்துள்ளன. எனவே, ஒரு பகிரப்பட்ட அரசாங்கம் மற்றும் அரசியல் ஒற்றுமை ஒருமித்த கருத்து மூலம் மட்டுமே அடைய முடியும்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை நீங்கள் விரும்பும் எதிர்கால இலங்கையை உருவாக்கும் வெற்றியாக மாற்ற நாங்கள் உழைத்து வருகிறோம்.

எதிர்காலத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதை நாம் அறிவோம். எனவே தேசிய மற்றும் முற்போக்கு சக்திகள் கைகோர்க்கும் வகையில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் உருவாக்கத்தை இந்நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகவே நாம் கருதுகின்றோம்.

நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் மக்கள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்வது அவசியமாகும். இங்கே புதிய தலைமுறை நம்மைப் பார்க்கிறது. அந்த வருங்கால சந்ததிக்காக இந்த பயணத்தை மேற்கொள்கிறோம். ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது" என்றார்.

# சஜித்தின் வரைவுத் திட்டம் 3.0 வெளியீடு





ஐக்கிய மக்கள் சக்தியின் வரைவுத் திட்டம் 3.0 வெளியீட்டு நிகழ்வு நேற்று ரத்னதிப சங்கம் மண்டபத்தில் இடம்பெற்றதோடு, இதில் சிறப்புக் கருத்துரையாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டார்.

இதில் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோர் பேச்சாளர்களாக கலந்து கொண்டனர்.

இலங்கையை கட்டியெழுப்புவதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்கு குறித்து இங்கு தெளிவூட்டப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் Economic Blueprint பொருளாதார திட்டம் மற்றும் சஜித் பிரேமதாசவின் ஜனாதிபதி கொள்கை பிரகடனம் என்பன இங்கு வெளியிட்டு வைக்கப்பட்டன.

# திருமலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் இன்று பரப்புரையில் ஈடுபட்டிருந்த போது...





முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இளைஞர்கள், வாக்காளர்களை அறிவூட்டும் வேலைத் திட்டம்

## கஃபே அமைப்பினால் நடத்தப்பட்டது




(நவாஸ்)

2024ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டகளுக்கு கஃபே அமைப்பின் ஊடாக வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டமொன்றை நேற்றுமுன் தினம் கஃபே அமைப்பு நடைமுறைபடுத்துவதாக கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி,மன்னார், அநுராதபுரம், பொலனறுவை மற்றும் திருகோணமலை ஆகிய 6 மாவட்டகளில் இருந்து ஒரு மாவட்டத்துக்கு இருவர் வீதம் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பயிற்சிவிக்கப்பட்டதன் பின்னர் அவர்களது மாவட்டகளுக்கு சென்று வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டங்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயிற்சிவிப்பின் மூலம் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியினில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் கடமைகள் அதேபோன்று வாக்களிக்கின்ற முறைமைகள், வாக்களிப்பில் இளைஞர்களின் ஆர்வத்தை அதிகரிப்பது எவ்வாறு. அதுமாத்திரமில்லாமல் விவசாயபிரதேசங்கள் மற்றும் கடற்தொழில்பிரதேசங்களில் இருக்ககூடிய வாக்காளர்களின் வாக்களிப்பு வீதத்தை எவ்வாறு அதிகரித்தல், என பல விடயங்கள் தொடர்பான பயிற்சிவிப்புக்கள் வழங்கப்பட்டன.

இன்று முதல் அவர்கள் தமது மாவட்டங்களுக்கு சென்று, நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு முன் அம்மாவட்டங்களில் குறைந்தது 10 வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்தபடவுள்ளதாக கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளரான மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கு வரப்பிரசாதமான மோட்டார் வாகனப் பயிற்சிநெறி

## அதிபரின் முயற்சியால் சம்மாந்துறையில் ஆரம்பம்

(வி.ரி. சகாதேவராஜா)

கபொத சாதாரண தரம் பயின்ற மாணவர்களுக்கு வரப்பிரசாதமான மோட்டார் வாகன பயிற்சிநெறி (யரவழ அழடிடைந) சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியின் அதிபர் சதாசிவம் தியாகராஜா மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக இலங்கையில் சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரிக்கு மாத்திரம் இதற்கான விசேட அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இதற்கான விசேட அனுமதியினை தொழில்நுட்ப பயிற்சி திணைக்கள பணிப்பாளர் நாயகம் எஸ். ஜெகத் வழங்கியுள்ளார்.

கல்வி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் மோட்டர் வாகன தொழில்நுட்ப கற்கை நெறியின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றரை வருட பயிற்சி நெறியான இதற்கு சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த சம்மாந்துறை முஸ்லிம் மத்திய தேசிய பாடசாலை, நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயம்,தாருஸ்ஸலாம் மகா வித்தியால மாணவர்கள் 25 பேர் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டார்கள்.

அங்குரார்ப்பண நிகழ்வில் நிகழ்வு கல்லூரி அதிபர் சதாசிவம் தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. பிரதம



விருந்தினராக சம்மாந்துறை வலயகல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கலந்து கொண்டார்.

பயிற்சி நெறிக்கு பொறியியலாளர் எம்.ஹம்ஸா பொறுப்பதிகாரியாக செயற்படுகிறார்.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் பத்தாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவிருக்கிறது. ஏனைய போக்குவரத்து சலுகைகளும் வழங்கப் படவிருக்கிறது. சமகாலத்தில் சர்வதேச ரீதியாக இப்பயிற்சி நெறிக்கு அதிக கிராக்கி நிலவுகிறது.




# சுன்னாகத்தில் வாள்வெட்டு! இளைஞர் ஒருவர் படுகாயம்

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாவடி தெற்கு பத்திரகாளி கோவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் இரவு 9:30 மணி போல் உள் நுழைந்த மர்ம நபர்கள், இளைஞன் மீது வாள் வெட்டினை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் விபுலானந்தம் அபீஸ் (வயது 22) என்ற இளைஞன் கையில் வாள்வெட்டு தாக்குதலுக்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

நான்கு பேர் கொண்ட குழுவே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்ட இளைஞன் சுண்ணாகம் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த வாள்வெட்டு தாக்குதல் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் இதுவரை தெரியவரவில்லை என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை சுண்ணாகம் குற்றத் தடுப்பு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இதற்கு முன்னரும் கடந்த வருடம் குறித்த இளைஞன் மீதும் தாயார் மீதும், தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# அஜித் டோவலின் விஜயத்துக்கும் தமிழரசின் முடிவுக்கும் தொடர்பு?

## அநுரகுமார திசாநாயக்க வெளியிடும் சந்தேகம்



வடக்கு மக்கள் மிகப்பெரும் மாற்றத்தை எதிர்பார்த்துள்ள நிலையில் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் அந்த மாற்றத்திற்கு இடையூறாக இருந்தது என்று கூறும் நிலை உருவாகிவிடக் கூடாது என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அதேவேளையில், தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தின் பின்னணியில் இந்தியா உள்ளதா என்ற சந்தேகத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில், அனைத்துக் கட்சிகளினதும் பரப்புரைகள் தீவிமடைந்துள்ளன. இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசநாயக்க தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்களித்த நேர்காணலில் பல விடயங்கள் தொடர்பாகவும் தெரிவித்த தகவல்கள் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களிடையே தேசிய மக்கள் சக்திக்கு உள்ள ஆதரவு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அநுரகுமார முக்கியமான தகவல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கின்றார்.

அதன்போது அநுரகுமார கூறுகையில், "இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது எங்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தினார். இந்தியா மற்றும் இலங்கையுடனான இராஜதந்திர உறவுகள் தொடர்பிலும் இதற்கு முன்னரான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட வலய பாதுகாப்பு தொடர்பிலும் கலந்துரையாடினார்" என்றும், "இதனை தவிர அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவில்லை" என்றும் தெரிவித்தார்.

"இந்திய பாதுகாப்பு ஆலோசகரின் சந்திப்பு மற்றும் அதன் பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சி எடுத்த தீர்மானத்திற்கு இடையே ஏதாவது தொடர்பு உள்ளதா என்ற சந்தேகங்கள் உள்ளன" என்றும் தெரிவித்த அநுரகுமார திசநாயக்க, "அப்படி தொடர்பு இருந்தால் எதிர்காலத்தில் தெரியவரும்" என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் தொடர்பில் தங்களுக்கு வேறு விமர்சனப் பார்வையொன்று உள்ளது என்று தெரிவித்த அநுரகுமார, "வடக்கு, கிழக்கிற்கு அப்பால் தென்பகுதியிலுள்ள தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே சமூகத்தில் புதிய மாற்றத்திற்கான எண்ணம் உள்ளது" என்றும், "அதுவே எங்கள் மீதான விருப்பத்தை காட்டுகின்றது" என்றும் குறிப்பிட்டாார்.

"இவ்வாறான மாற்றத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எடுத்ததா என்ற விமர்சனம் தெற்கில் உருவாகின்றது" என்றும் சுட்டிக்காட்டிய தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர், "2022ஆம் ஆண்டுக்கு பின்னர் இனவாத அரசியல் இல்லாமல் போயுள்ளது" என்றும், "மீண்டும் பெரிய மாற்றங்களை எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு அந்த மாற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் அவர்களே என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டால் அது பொருத்தமாக இருக்காது" என்றும் தெரிவித்தார்.

"இதற்கு முன்னர் வடக்கு மக்கள் ராஜபக்ஷக்கள் இருக்கும் முகாமை தோற்கடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர்" என்று குறிப்பிட்ட அநுரகுமார, "அவ்வாறாக ராஜபக்ஷவுக்கு எதிரானவர்களுக்கே வாக்குகளை வழங்கும் மனநிலையே இருந்தது" என்றும், "இதன்படியே 2010இல் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இவ்வாறான காலத்தில் மக்களுடன் இணைந்து தமிழரசுக் கட்சிக்கு தீர்மானம் எடுக்கலாம்" என்றும் அநுரகுமார திசநாயக்க மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்காவும் இந்தியாவுமே ஜனாதிபதி தேர்தலில் போட்டி

## உதய கம்மன்பில தெரிவிக்கிறார்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகிய இருவரையும் ஒன்றிணைக்கும் இராஜதந்திர திட்டத்தை சக்தி வாய்ந்த நாடு அமுல்படுத்தி வருவதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இணைய சனல் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்த உதய கம்மன்பில, எதிர்வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமான தேர்தல் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவும் அமெரிக்காவுமே போட்டியிடுகின்றன" என்று தெரிவித்த உதய கம்மன்பில, "அநுரகுமார திசாநாயக்கவுக்கு அமெரிக்காவும், ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்தியாவும் ஆதரவு தெரிவித்து வருகின்றன" என்றும், "இதனால் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசநாயக்கவின் வெற்றியைத் தடுப்பதற்கு சஜித் பிரேமதாசவுக்கு இந்தியா உதவி செய்கின்றது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அரசாங்கம் இணைந்து ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்து அவருக்குக் கீழ் சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமிக்க திட்டமிடப்பட்டது" என்று குறிப்பிட்ட உதய கம்மன்பில, "அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தற்போது அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்று அமெரிக்கா இலங்கையில் பலம் பெறுவதை இந்தியா விரும்பவில்லை" என்று தெரிவித்தார்.

இதனால் அதிக ஆசனங்களை கொண்டுள்ள கட்சியின் தலைவரான சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாகவும் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராகவும் மாற்றும் வகையில் திட்டம் மாற்றப்பட்டுள்ளதாகவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

"எனினும் அரசாங்கத்துக்கு எதிரான வாக்குகளே சஜித் மற்றும் அநுரவுக்கு பிரிந்து சென்றுள்ளன" என்று சுட்டிக்காட்டிய உதய கம்மன்பில, "சஜித் பிரேமதாச அரசாங்கத்துடன் இணைந்தால் அந்த வாக்குகள் அநுரகுமாரவுக்கு செல்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாலும், ரணில் விக்ரமசிங்க பிரதமரானால் நாடாளுமன்ற பெரும்பான்மையை கொண்டு ஜனாதிபதிகளான சந்திரிக்கா மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு வழங்கிய நெருக்கடியை போன்று தமக்கும் வழங்கக் கூடும் என்று சஜித் பிரேமதாச அஞ்சுவதாலும், இதற்கான உடன்பாடுகள் எட்டப்படவில்லை" எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டில் எந்த சக்தி தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தாலும் இதுவரை நாட்டிலுள்ள 30 வீதமான வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை தீர்மானிக்கவில்லை" என்று குறிப்பிட்ட உதய கம்மன்பில, "இவர்களே வெற்றியை தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் 50 வீதத்தை பெற்றுக் கொள்ளப்போவதில்லை" என்றும் தெரிவித்தார்.

# 3 எழுத்து வேட்பாளரால் நாட்டுக்கே ஆபத்தாம்!

## குழப்பத்தை ஏற்படுத்திய ஜோதிடர்

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மூன்றெழுத்து வேட்பாளர் வெற்றி பெற்றால் அது நாட்டுக்கு பாதகமாக அமையும் என இந்திய ஜோதிடர் ஒருவர் புதிய கணிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசியல்தலைவர்கள்பலரும்முக்கியமான முடிவுகளை ஜோதிடர்களுடன் கலந்தாலோசித்தே எடுப்பது வழமை. குறிப்பாக இந்தியா சென்று ஜோதிடர்களின் ஆலோசனைகளைப் பெறுவார்கள். இந்திய ஜோதிடர்களின் கணிப்புக்களிலும் அவர்கள் அக்கறை காட்டுவது வழமை.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு அதிக நன்மை, யாருக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்பதை அறிய அரசியலில் பிரபலமான ஒருவர் இந்தியா சென்றிருந்த நிலையில் அங்கு பிரபலமான ஜோதிடர் ஒருவரை சந்தித்ததாகக் கூறப்படுகின்றது.

தற்போது மூன்றெழுத்து வேட்பாளரால் நாட்டுக்கு ஆபத்து உள்ளதாக இதன்போது அவருக்கு ஜோதிடரால் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தற்போது ஜனாதிபதி வேட்பாளர்கூளாக போட்டியிடும் பெரும்பாலானோர் மூன்றெழுத்து வேட்பாளர்களாக இருப்பதால் யார் அந்த வேட்பாளர் என்ற பேச்சுக்கள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் ஆராயப்படுகின்றது.

38 ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணில், சஜித், அநுர, நாமல் என பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் மூன்றெழுத்து கொண்ட நபர்களாக இருக்கின்றனர். மேலும் இதற்கு முன்னரும் மூன்றெழுத்து ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்துள்ளமையாலும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கசூளிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர்கள் பெரும்பாலும் சோதிடம் மீது அதிக நம்பிக்கை கொண்டுள்ளமையால், தற்போதைய தேர்தலிலும் அதன் செல்வாக்கு அதிகம் காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மூன்றெழுத்து வேட்பாளர் வெற்றி பெற்றால் அது நாட்டுக்கு பாதகமாக அமையும் எனவும் 2028 ஆம் ஆண்டு மீண்டும் போராட்டத்துக்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் ஜோதிடர் தெரிவித்ததாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# 13 பிளஸ் குறித்து தமிழரசும், சஜித்தும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

## அங்கஜன் இராமநாதன்

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென தமிழரசுக் கட்சி முடிவெடுத்திருக்கும் நிலையில், 13 பிளஸ் குறித்தும் பேசப்படுகின்றது. இது தொடர்பாக தமிழரசுக் கட்சியும், சஜித் பிரேமதாசவும் தமிழ், சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் முக்கியமாகக் குறிப்பிட்டவை வருமாறு –

"இனப் பிரச்சினைக்கான தீர்வாக 13 பிளஸ் ஐ தருவதாக ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச உறுதியளித்திருப்பதாக கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற சஜித் பிரேமதாசவின் பிரசார கூட்டத்தில் அவரின் முன்பாக தமிழரசு கட்சி பிரதிநிதி ஒருவர் கூறினார். இதனை அதே மேடையில் இருந்த சஜித் பிரேமதாசவும் நிராகரிக்கவில்லை.




நான் ஒரு தமிழன் என்ற வகையில் இதனை வரவேற்கின்றேன். ஆனால், சஜித் பிரேமதச தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை குறிப்பிடவில்லை. ஆகவே, சஜித் பிரேமதச தமிழரசு கட்சியுடன் செய்துகொண்டுள்ள ஒரு இரகசிய உடன்படிக்கையின் பிரகாரமாகவே இந்த உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டிருந்திருக்கலாம்.

ஆனால், 13 பிளஸ் என்பது எல்லையற்றது. ஆகவே, இந்த பிளஸ் தமிழீழம் வரையா அல்லது சமஷ்டி வரையா என்ற அதன் எல்லையற்ற தன்மையை திரு சஜித் பிரேமதாச அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் சிங்கள மக்களுக்கு முன்பாக அவர் மேடையில் இதனை குறிப்பிடவேண்டும் என்றும் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அவ்வாறு அவர் இதனை சிங்கள மக்களுக்கு முன்பாக உறுதிப்படுத்துமிடத்து தமிழ் மக்களின் நன்மை கருதி நானும் சஜித் பிரேமதச அவர்களுக்கு ஆதரவு அளிப்பதற்கு தயாராக இருக்கின்றேன்.

அதேவேளை, தமிழரசு கட்சியும் சஜித் பிரேமதாசாவுடன் 13 பிளஸ் தொடர்பில் எட்டப்பட்டுள்ளதாக கூறப்படும் இணக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறு, சஜித் பிரேமதாச அவர்களும் தமிழரசு கட்சியும் 13 பிளஸ் பற்றி விபரங்களை உறுதிசெய்வதற்கு தவறுமானால் அதனை பொய்களை கூறி தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்தபின்னர், நடுத்தெருவில் அவர்களை நிற்கவைக்கும் ஏமாற்று நடவடிக்கை என்றே இதனை கருத வேண்டும்

ஆகவே, சஜித் பிரேமதசவின் உறுதிமொழிகள் தொடர்பிலும் தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு தொடர்பிலும் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட மாகாண சபை தேர்தல் நடத்துவது தொடர்பான தனிநபர் பிரேரணை கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் 3 ஆம் வாசிப்புக்கு எடுக்கப்படவிருந்த நிலையில் இறுதித் தருணத்தில் எடுக்கப்படாது ஒத்திவைக்கப்பட்டதாக அறிகிறேன்.

இந்த நிலையில் இந்த பிரேரணையை எடுக்கவிடாது தடுத்து ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை பழிவாங்கி விட்டதாக சுமந்திரன் எம்.பி குற்றம் சாட்டியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்த நிலையில் அதற்காக நாடாளுமன்றத்தில் உள்ள அனைவருடைய ஆதரவையும் பெறும் முயற்சிகள் ஈடுபட்டிருந்தார். இவ்வாறானநிலையில் தமிழரசு கட்சியினர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கிய நோக்கம் மாகாண சபை தேர்தலை நடத்த விடாமல் குழப்புவதற்காகவா என்ற சந்தேகம் எழுகிறது" என்றும் அங்கஜன் தெரிவித்தார்.



# பீடாதிபதியின் நினைவு தினமும் விரிவுரையும்



யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தின் முதலாவது பீடாதிபதி சோமசுந்தரம் கந்தையாவின் நினைவும் நினைவு விரிவுரையும் யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீட கோட்போர் கூட மண்டபத்தில் விவசாய பீடத்தின் பீடாதிபதி கே.பகீரதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா கலந்து கொண்டார். நினைவு விரிவுரையினை ஜப்பான் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் DR-YASUHIRO MORITA அவர்கள் உலர் வலயத்தில் கால்நடை வளர்ப்பு என்ற தொனிப்பொருளில் விரிவுரையை நிகழ்த்தியிருந்தார்.

குறித்த நிகழ்வில் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், விவசாயபீடத் தைச்சேர்ந்த மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். 113









## புகைப்படக்கலையில் செயன்முறை பயிற்சி



அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் உயர்தரப் பிரிவில் தொடர்பாடலும் ஊடகக் கற்கை பாடத்தினை பயின்று வரும் மாணவர்கள் மத்தியில் புகைப்படக் கலையினை விருத்தி செய்யும் நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட செயன்முறைப் பயிற்சி கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். உதவி பிரதேச செயலாளர் வை.ராசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.முகம்மட் ரின்சான், மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.நவப்பிரியா, பாடசாலையின் உயர் தரப் பிரவு வலயத் தலைவர் எம்.ஐ.எல். பைஷல், அபிவிருத்தி உத்தியோகத்தர் பர்ஷானா சம்சுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது கலந்து கொண்டனர்.

காலத்திற்கு ஏற்ப மாணவர்களின் துறைசார் தேவைகளை கருத்திற் கொண்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ஆகியன இணைந்து அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மாணவர்களுக்கு இப்பயிற்சியினை வழங்க முன்வந்தமை தொடர்பில் இப்பாடசாலையின் அதிபர் தலைமையிலான ஆளணியினரும், கல்விச் சமூகத்தினரும் தமது நன்றியறிதலை தெரிவிக்கின்றனர்.

இதன்போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தினை பயின்று வரும் சுமார் நூறு மாணவர்கள் கலந்து கொண்டு புகைப்படக் கலை தொடர்பிலான பயிற்சியினை பெற்றுக் கொண்டனர்.

புகைப்படக் கலை தொடர்பான சிறந்த அறிவும் அனுபவமும் கொண்ட வளவாளரான ஐ. ஹாதி ஹசன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு புகைப்படக் கலை தொடர்பான விளக்கங்களையும் செயன்முறைப் பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்கினர்.

புகைப்படத்துறையின் நுட்பங்கள், புகைப்படத்துறை வரலாறு, புகைப்படத்துறைப் பிரிவுகள் மற்றும் புகைப்படக் கலைத்துறையில் கையாள வேண்டிய அம்சங்களும் நடைமுறைகளும் போன்ற பல்வேறு விடயங்கள் கோட்பாடு ரீதியாகவும் செயன்றைகள் மூலமாகவும் இதன்போது மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டகை குறிப்பிடத்தக்கது.




## ரணிலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வின் போது, புதிய கூட்டணியின் சின்னமாக 'கோப்பை' சின்னம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எல்பிடிய பிரதேச சபைக்கான தேர்தலை கோப்பை சின்னத்தில் சந்திக்க உள்ளதாக அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய ரமேஷ் பத்திரன கூறினார்.

## ரணில் - தமிழரசு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணங்களுக்காகத் அதனைத் தவறவிட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி பல்வேறு தருணங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்து பற்றியும் அதிகமாகப் பேசுகின்றது, ஆனால் செயற்பாட்டில் வேறுபட்ட நிகழ்ச்சி நிரலை அக்கட்சியினர் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த உண்மையை நான் சொன்னால், எனக்கு தமிழ் சினிமாத் திரைப்படங்களில் வரும் 'வில்லன்' போன்று முத்திரை குத்துகிறார்கள். ஆனால், தமிழ் மக்களின் உண்மையான வில்லன்கள் யார் என்பதை தமிழ் மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பார்கள்.

ரணிலுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக உங்களால் உணர்ந்து கொள்ள முடியும். நான் தமிழ் மக்களுக்கு உண்மையைச் சொல்கிறேன், ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை நம்பவைப்பதற்காக பொய் சொல்கிறார்.

மாகாண சபை முறைமைகள் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மீண்டும் தனது மக்களை தோல்வியடைய செய்துள்ளது, ரணில் மீண்டும் தமிழ் மக்களை முட்டாளாக்கியுள்ளார்.

இதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் நீண்டகாலமான தலைமைக் கட்சி என்ற பாத்திரத்தினை இனி வகிக்க முடியாத நிலையை அடைந்துள்ளது.

அந்தக் கட்சியினர் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தினை எடுத்துள்ளதான் காரணமாக உட்கட்சிப் பிளவு வலுவாகியுள்ளது. தமிழ் மக்களுக்கான ஏகோபித்த தலைமையை அந்தக் கட்சியினால் வழங்க முடியாத பரிதாமான நிலைமையை அடைந்துள்ளது என்று மேலும் தெரிவித்தார்.

## தபால் மூலமான வாக்களிப்பு யாழில் சுமூகமாக நடந்தது



இலங்கையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது.

மாவட்ட செயலக அலுவலகங்கள், தேர்தல் ஆணைய அலுவலகங்கள், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகங்கள், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், சிறப்பு அதிரடிப்படை முகாம்கள், சிறப்பு காவல் பிரிவுகள் மற்றும் விஜபிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க முடியும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் அமைக்கப்பெற்றுள்ள வாக்களிப்பு நிலையத்தில் இன்று வியாழக்கிழமை ஆசிரியர்களுக்கான அஞ்சல் வாக்களிப்பு இடம்பெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2024இல் வெளியிடப்பெற்றது.